# கஷ்மீர் யாருக்கு...

(31ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் நடந்தது என்ன தெரியுமா? குடும்ப உறவுகளே பிரித்துத் தள்ளப்பட்டன. எடுத்துக்காட்டாக, நினைத்தவுடன் கால் நடையாகவே போய்வரும் தூரத்திலிருந்த அண்ணனின் குடும்பம் இந்தியர்கள் என்றும் தங்கையின் குடும்பம் பாகிஸ்தானியர்கள் என்றும் மாறின. கூப்பிடும் தொலைவிலிருக்கும் தன் தங்கையைப் பார்க்கவேண்டும் என்றால் அண்ணன் பல மைல்களுக்கு அப்பால் இருக்கும் இந்தியத் தலைநகருக்குச் சென்று விசா எடுத்து பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கஷ்மீர் தனக்குத்தான் சொந்தம் என்று கூறிக்கொள்ளும் இந்தியா அதை நியாயப் படுத்துவதற்காக அப்போது (1947 இல்) கஷ்மீரின் மன்னராக இருந்த ஹரிசிங் என்பவர் கஷ்மீரை இந்தியாவோடு இணைக்கும் நோக்கோடுசெய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்தை காரணம் காட்டுகிறது. உண்மையில் இந்த இணைப்பு தற்காலிகமானது. கஷ்மீர் மக்கள் இதைத் துளியளவேனும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அப்போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த மவுண்ட் பெற்றன் இந்த இணைப்பைத் தற்காலிகம் என்று ஒத்துக் கொண்டதுடன் கஷ்மீர் மக்கள் தங்களது விருப்பத்திற்கு ஏற்ப ஒரு வாக்கெடுப்பு (Plebiscite) நடத்தி இந்தியாவுடன் சேர்ந்திருப்பதா இல்லையா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்றும் வரையறுத்தார். அன்றைய இந்தியத் தலைவர்களான காந்தியடிகள் மற்றும் ஜவகர்லால் நேரு போன்றவர்களும் இதனை ஏற்றுக் கொண்டனர்.

அடுத்த ஆண்டில் அதாவது 1948 இல் இந்தப் பிரச்சனை ஐ.நா. மன்றம் வரை சென்றது. ஐ.நாவும் உலக நியதிக்கேற்ப வாக்கெடுப்பை நடத்துமாறு கேட்டுக் கொண்டது.

ஆனால் இன்றுவரை அந்த வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. மேலை நாடுகளில் நடைபெறும் இதுபோன்ற வாக்கெடுப்புக்கள் இந்தியா போன்ற நாடுகளில் நடைபெறுவதில்லை என்று சிலர் வாதிடுகின்றனர். அதிலும் உண்மை இல்லை அதே கால கட்டத்தில் நடந்த 'யுனகத் பிரச்சனைக்கு' இந்தியாவே முன்னின்று வாக்கெடுப்பை நடத்தியது.

**பல உள்நாட்டு வெளிநாட்டு சிக்கல்களில் தலைக்கொரு சியாக்காயையும் தாடிக்கொரு சியாக்காயையும் பூசிக் கொள்ளும் இந்தியா கஷ்மீர் யுனகத் பிரச்சனைகளிலும் அவ்வாறே நடந்து கொண்டது.**

'யுனகத்' என்பது தற்போதைய குஜராத் மாநிலத்தில் உள்ள ஒரு பகுதியாகும். அதன் அப்போதைய மன்னர் நவாப் அதனை பாகிஸ்தானோடு இணைத்தார். இந்த இணைப்பை ஏற்றுக் கொள்ளாமல் இந்தியா தனது படைகளை அனுப்பி அதே 1947 இல் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

இதனைக் கண்டு பாகிஸ்தான் வெகுண்டது. யுனகத்தில் உள்ளவர்கள் இந்தியச் சார்பு கொண்ட இந்துக்கள் என்பதைத் தெரிந்து கொண்ட இந்தியா தாமாகவே முன்வந்து வாக்கெடுப்பை நடத்தியது. முடிவுகள் இந்தியா எதிர்பார்த்த வண்ணம் அதற்குச் சாதகமாகவே அமைந்தன.

ஆனால் கஷ்மீரிலோ அதற்கு நேர் எதிராக இன்றுவரை நடந்து கொள்ளுகிறது. பல உள்நாட்டு வெளிநாட்டு சிக்கல்களில் தலைக்கொரு சியாக்காயையும் தாடிக்கொரு சியாக்காயையும் பூசிக் கொள்ளும் இந்தியா கஷ்மீர் யுனகத் பிரச்சனைகளிலும் அவ்வாறே நடந்து கொண்டது.

இந்திய அரசினால் வஞ்சிக்கப் பட்ட கஷ்மீர் மக்கள் கொரில்லாப் போர் வழியாக தங்கள் நாட்டை மீட்டெடுக்க முடிவுசெய்தனர்.

இதன் அடிப்படையில்தான் கஷ்மீரின் முக்கிய பிரிவினைவாத அமைப்பான JKLF (Jammu Kashmir Liberation Front) எனப்படும் ஜம்மு கஷ்மீர் விடுதலை முன்னணி தோற்றுவிக்கப் பட்டது. 1977 ஆம் ஆண்டு மே 29 ஆம் நாள் இங்கிலாந்தில் உள்ள பேர்மிங்கத்தில் அமானுல்லா கான் மற்றும் மக்பூல் பாத் என்பவர்களால் இது தோற்றுவிக்கப் பட்டது.

இதன் அடிப்படை நோக்கம் இந்தியாவாலும் பாகிஸ்தானாலும் கைப்பற்றபட்ட கஷ்மீர் நிலப்பரப்புக்களை மீட்டெடுத்து அவற்றை ஒன்றாக இணைத்து 1947 இற்கு முன்பு இருந்த கஷ்மீரை உருவாக்குவதே. இந்த இயக்கம் தோற்றம் பெறும் போதே தங்களின் நோக்கம் தேசிய விடுதலையேயன்றி இஸ்லாமிய அடிப்படைவாதம் அல்ல என்பதையும் தெளிவு படுத்தியிருந்தது.

மதச் சார்பின்மையையும் தேசிய இனவிடுதலையையும் முன்வைத்த கஷ்மீர் மக்களின் கோரிக்கையானது இந்தியாவுக்கு மட்டுமல்ல பாகிஸ்தானுக்கும் பிடிக்கவில்லை. ஏனெனில் அவர்கள் கேட்டது ஒட்டு மொத்த கஷ்மீரின் விடுதலை.

இந்தியாவைப் போன்று கஷ்மீரை தன் வசமாக்கிக் கொள்ளவே அதுவும் விரும்பியது. போதையில் இருப்பவர்களுக்கு கள்ளை ஊற்றிக் கொடுப்பது போல் இஸ்லாமிய அடிப் படைவாதிகளுக்கு ஆயுதங்களை கொடுத்து இந்தியாவுக்கு எதிராகக் களமிறக்கி விட்டது.

இதன் உச்சக் கட்டமாக 1989 ஆம் ஆண்டு 'ஹ்ஸ்புல் முஜாஹ்டின்' என்ற இராணுவ அமைப்பை பாகிஸ்தான் தோற்றுவித்தது. மத அடிப்படைவாதம் கொண்ட இந்த அமைப்பானது மதநல்லிணக்கம் கொண்ட JKLF போன்ற விடுதலை அமைப்புக்களை ஓரம் கட்டி இன்று சுயநிர்ணைய உரிமைப் போரை 'ஜிகாத்' எனப்படும் புனிதப் போராக மாற்றி வருகிறது.

அதை எதிர்க்கிறோம் என்ற பெயரில் செயல் படும் இந்திய இராணுவத்தினரின் அடக்கு முறையால் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப் பட்டு வருகின்றனர். இது ஒரு வகை அடக்கு முறை என்றால் அங்கு காலூன்றியிருக்கும் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த மதவாதிகளின் அடக்கு முறை வேறு வகையாக உள்ளது.

இஸ்லாமிய சட்டத்தை மீறுபவர்கள் ஈவிரக்கமின்றி நடத்தப் படுகின்றனர். ஆக இந்தியாவின் இந்து அடிப்படைவாதிகளால் வளர்த்து விடப் பட்ட இந்தியத் தேசியவாதத்திற்கும் பாகிஸ்தான் வளர்த்துவிட்ட இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கும் நடுவில் கஷ்மீர் மக்களின் வாழ்வு தொடரும் துயரமாக நீள்கிறது.

மக்களின் நலனை முன்வைக்காத அல்லது அதனை புறக்கணிக்கும் தேசியங்கள் எத்தகையவையாக இருப்பினும் வறட்டுத்தனமான போலித் தேசியங்களே. அத்தகைய தேசியவாதங்கள்தாம் பிற இனங்கள் மீது படை எடுத்து தங்கள் அதிகார வெறியை நிலை நாட்ட முயற்சிக்கின்றன.

இந்திய ஆளும் வர்க்கத்தின் அத்தகைய ஒரு தேசியமே இன்று கஷ்மீரை மயான பூமியாக மாற்றி வருகிறது. பாகிஸ்தானின் பங்கு இருந்தாலும் அதனைத் தொடக்கி வைத்த பெருமை இந்தியாவையே சேரும்.

உலகில் மதவாதம் காவு கொண்ட மனித உயிர்களைக் காட்டிலும் தேசியவாதம் காவு கொண்ட மனித உயிர்கள் அதிகமாகவே தெரிகின்றன.

மதவெறி அருவருப்பானது என்பதை உணர்ந்திருக்கிறோம் ஆனால் தேசியவெறி அதனைக் காட்டிலும் அருவருப்பானது.


Kerala Ayurvedic Health Clinic (Near Wembley)

1 Odean Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadly Line



▲ Massage Therapies by experienced and highly skilled therapists
▲ Treatment is designed around your individual health needs
▲ Safe and effective Ayurveda supplements/ medicines for your needs
▲ Only natural medicines are used
▲ No side effects at all
▲ Wide range of therapies



▲ Arthritis ▲Back Pain
▲ Frozen Shoulder ▲Whiplash
▲High Blood Pressure ▲Obesity
▲Pulled Muscles ▲Joint Pain
▲High Cholesterol ▲Digestive Disorders
▲Trapped Nerve ▲Diabetes
▲Paralytic Conditions ▲Sleeplessness
▲Certain Skin Conditions ▲Stiffness
▲Stress and Strain ▲Migraine

FREE Consultation
Authentic and Effective Kerala Ayurvedic Treatments
Qualified and Registered Ayurvedic Physicians
Affordable Prices

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுர்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்.........



* Providing Free Steam Bath, Shower, Towels, Shampoo etc.,
* Male and Female therapists available
* Can speak in Hindi Tamil or English & Malayalam
* Free Parking

20% Discount as Summer Special

Call 020 8902 1104 / 020 8902 1707